இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 90 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 24 – செவ்வாய்க்கிழமை 10 நவம்பர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 90 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 24 - Tuesday 10 November 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

சினிமா திரையரங்குகளுக்கு அனுமதி அளிக்கும் த.வெ.க. அரசு

மாநில உரிமைகளுக்கு மட்டும் தடை விதிப்பது ஏன்?

நீதியரசர் குரியன் ஜோசப் குழு கலைப்பு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, நவ. 10 -

“த.வெ.க. ஆட்சியில் மாநில உரிமைகளுக்குத் தடை, சினிமா திரையரங்குகளுக்கு அனுமதி” என்று நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழு கலைக்கப் பட்டது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய மாநில உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட குரியன் ஜோசப் குழுவை திடீரென கலைத்து த.வெ.க. அரசு அரசாணை வெளியிட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மாநிலங்களின் உரிமை



களைப் பாதுகாக்கவும், இந்தியக் கூட்டாட்சிக் கட்டமைப்பை வலுப் படுத்தவும் இந்தக் குழு அமைக்கப் பட்டது. இந்தக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி குரியன் ஜோசப் நியமிக்கப்பட்டார். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் வர்தன் ஷெட்டி, மாநிலத் திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன் ஆகியோர் உறுப் பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், இந்தியக் கூட்டாட்சிக் கட்டமைப்பை மறுசீரமைக்கவும் மற்றும் மாநிலத்தின் சட்ட மற்றும் நிர்வாக அமைப்புகளை மேம்படுத்து தல் போன்ற பணிகள் இப்போது தமிழ்நாடு மாநில சட்ட ஆணை யத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

“திரைப்படங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை, மாநில உரிமைகளுக்கு அளிக்க த.வெ.க. அரசு மறுப்பதாக கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

த.வெ.க. ஆட்சியில் சினிமா திரையரங்குகளுக்கு பச்சைக் கொடி, மாநில உரிமைகளுக்கு தடையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவை பெரியார் அறிவுலகத்தில்

புத்தகக் கொள்முதல் ஊழல் குறித்து விசாரிக்க வேண்டும்!

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு தி.மு.க. சார்பில் சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமன் வலியுறுத்தல்!

சென்னை, நவ.10 -

கோவை ‘பெரியார் அறிவுலகத்தில்’ புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க தி.மு.க. சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப் புத்துறை இயக்குநருக்கு புகார் அனுப்பி யுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

கோவை பெரியார் அறிவுலகத்தில் புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க தி.மு.க. சார்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரி டம் நேற்று புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் கேள்விகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என கோரப்பட் டுள்ளது.

1. புத்தகங்களுக்கான கொள்முதல் / வாங்குதல் ஆர்டர்களை (procurement / purchase orders) வழங்கிய அதிகாரிகள் யார்?

2. புத்தகங்கள் ஒவ்வொன்றாக மதிப்பீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப் பட்டதா அல்லது மொத்தமாக (in bulk batches) வாங்கப்பட்டதா?

3. பதிப்பகங்களுக்கு கொள்முதல் ஆர் டர்கள் எந்த தேதிகளில் வழங்கப்பட்டன?

4. கொள்முதலுக்கான குறிப்பு கோப்பை (note file) தொடங்கிய, கையெழுத்திட்ட மற் றும் ஒப்புதல் அளித்த அதிகாரிகள் யார்?

5. கொள்முதலுக்கு தகுதிவாய்ந்த புத்த கத் தேர்வு / கொள்முதல் குழு (Book Selection / Purchase Committee) ஒப்புதல் அளித்ததா, மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டதா?

6. த்ரிஷா விஜய், சங்கீதா விஜய், தாமரை பன்னீர், தாமரை முரளி, மோனிகா ரவி ஆர். மற்றும் பிற பெயர்க ளைக் கொண்ட எழுத்தாளர்கள் உண்மை யில் இருக்கிறார்களா?

7. புத்தகங்கள் எந்த தேதிகளில் விநி யோகிக்கப்பட்டன, அவை பெறப்பட்டவுடன் அவற்றின் தரம் மற்றும் அளவு சரிபார்க்கப் பட்டதா?

8. ஒவ்வொரு பதிப்பகத்திற்கும் எந்த தேதிகளில், எவ்வளவு தொகை வழங்கப் பட்டது?

இவ்வாறு அந்த புகார் மனுவில் கூறப் பட்டுள்ளது.

திருப்பத்தூர் தொகுதி தேர்தல் விவகாரம்

பெரிய கருப்பன் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு ஏற்பு!

தேர்தல் ஆணையம் பதிலளிக்க உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்!

புதுடெல்லி, நவ.10-

தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலில், சிவ கங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி யில் தவெக சார்பில் போட்டியிட்ட சீனிவாச சேதுபதி, ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் 83,375 வாக்குகள் பெற்ற நிலை யில், அவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் பெரியகருப் பன், 83,374 வாக்குகளை பெற்றிருந்தார்.

இதனையடுத்து சீனி வாச சேதுபதியின் வெற் றியை எதிர்த்து முன் னாள் அமைச்சர் பெரிய கருப்பன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு பதிவான தபால் வாக்குகள், திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகு திக்கு அனுப்பப்பட்ட தால்தான் தோல்விய டைந்து விட்டதாக குறிப்பிட்டிருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன் றம் பெரிய கருப்பனின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டி ருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து பெரிய கருப் பன் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறை யீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு உச்ச நீதிமன்ற நீதி பதிகள் விக்ரம் நாத், அப ரேஷ் குமார் சிங் ஆகி யோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுவை பரிசீலித்த நீதிப திகள் பெரிய கருப்பனின் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக தெரிவித்து, இந்த மனு தொடர்பாக த.வெ.க. எம்.எல்.ஏ. சீனி வாச சேதுபதி, இந்திய தேர்தல் ஆணையம் உள் விட்டோர் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டனர்.

சென்னை உள்ளிட்ட

23 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

வானிலை ஆய்வு மையம் தகவல்!



சென்னை, நவ.10-

சென்னை உள்ளிட்ட 23 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சுமார் 0.9 கி மீ உயரத் தில் தென்கிழக்கு அரபிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய கேரள கடலோரப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவு கிறது.

இதன் காரணமாக, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப் பத்தூர், விழுப்புரம், தரும புரி, கிருஷ்ணகிரி, திருவண் ணாமலை, ஈரோடு, நாமக் கல், திருச்சிராப் பள்ளி, கரூர், திருப்பூர், தேனி, தென்காசி, மதுரை, திண் டுக்கல், கடலூர், திருநெல் வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள் ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

ஒன்றிய அரசின் கோரிக்கை நிராகரிப்பு;

‘கிரிமிலேயர்’ வரம்பு உத்தரவை அமல்படுத்த 8 வாரம் கெடு!

உச்ச நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, நவ.10-

கிரிமிலேயர் வரம்பு தொடர்பான உத்தரவை அமல்படுத்த ஒன்றிய அரசு கேட்ட 2 ஆண்டு கால அவகாசத்தை உச்சநீதிமன் றம் நிராகரித்து விட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்க ளின் பிள்ளைகளுக்கு, அவர்களின் பெற்றோரின் சம்பள வருமானத்தை மட் டும் அடிப்படையாக வைத்து ‘கிரிமிலேயர்’ வரம்பு நிர்ணயம் செய்யப் பட்டு வந்தது. இதனால் தங்களுக்கு ஒபிசி இட ஒதுக்கீடு மறுக்கப்படுவ தாக தெரிவித்து பாதிக்கப் பட்டவர்கள் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசா ரித்த உச்ச நீதிமன்றம், கடந்த மார்ச் 11ம் தேதி யன்று மிக முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கி யது. அதில், 1993ம் ஆண்டு வெளியிடப்பட்ட அதிகா ரப்பூர்வ குறிப்பாணையின் அடிப்படையில் பெற்றோ ரின் சமூக அந்தஸ்து மற் றும் வகிக்கும் பதவியை மட்டுமே அளவுகோலாகக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டது.

மேலும் அரசு ஊழியர்க ளுக்கு இணையாக பொதுத்துறை ஊழியர்க ளுக்கும் பதவி சமநி லையை உருவாக்கி, இந்த உத்தரவை 6 மாத காலத் திற்குள் ஒன்றிய அரசு அமல்படுத்த வேண்டும் என்றும் திட்டவட்டமாக அறிவுறுத்தியிருந்தது.

இந்த சூழலில் இந்த வழக்கு நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா மற்றும் ஆர்.மகா தேவன் ஆகியோர் அடங் கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான சொலி சிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, ‘இந்த தீர்ப்பை உடனே அமல்படுத்தி னால் கடந்த கால பணி நியமனங்கள் பாதிக்கப்ப டும் என்பதால், புதிய கொள்கையை வகுக்க 2 ஆண்டுகள் அவகாசம் தேவை’ என்று வாதிட் டார். ஆனால் ஒன்றிய அர சின் இந்த கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள், ‘கொள்கை முடிவெடுக்க இவ்வளவு நீண்ட அவகா சம் வழங்க முடியாது என் பதால், கடந்த மார்ச் 11ம் தேதி தீர்ப்பை நடைமு றைப்படுத்த மேலும் 8 வாரங்கள் மட்டுமே கால அவகாசம் தருகிறோம்’ என்று அதிரடியாக உத்தர விட்டனர்.

அதே சமயம் ஏற்கனவே முடிவடைந்த பழைய நிய மனங்கள் மாற்றப்படாது எனவும், முடிவுகள் இன் னும் முழுமை பெறாத 2025ம் ஆண்டுக்கான சிவில் சர்வீஸ் தேர்வுக்கு இந்த புதிய கிரீமிலேயர் விதிமுறை கட்டாயம் பொருந்தும் எனவும் நீதி பதிகள் தெளிவுபடுத்தினர்.

டெல்லியில் காற்று மாசு : கட்டுப்படுத்த நடவடிக்கை!



புதுடெல்லி, நவ.10-

காற்று மாசு கட்டுப் படுத்த டெல்லி மற்றும் என்.சி.ஆர். பகுதிகளில் கட்டுப்பாடுகள் அமல் படுத்தப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக இந்த கட்டுப்பாடுகளை காற்று தரும் மேலா ண்மை அறிவித்துள் ளது.

நவம்பர் 7,8 ஆம் தேதியில் குறிப்பிட்ட நேரங்களில் பசுமை பட்டாசுகளை மட் டுமே வெடிக்க அனு மதி வழங்கப்பட்டுள் ளது. நவம்பர் 9 முதல் பட்டாசு வெடிக்க மீண்டும் முழு தடை அமலுக்கு வருகிறது.

டெல்லி மற்றும் என். சி.ஆர். பகுதிகளில் மழை, பழைய ரக பெட்ரோல் டீசல் கார் கள் இயக்க தடை விதிப்பட்டுள்ளது. விதி கள் மீறினால் 20 ஆயி ரம் ரூபாய் வரை அப ராதம் விதிக்கப்படும். அத்தியாவசிய மற்றும் கட்டுமான பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.